## பெப்ரவரி - 22 - புதன்
### திருச்சீடர் பேதுருவின் தலைமைப் பீடம்
### "யாக்கோபின் கடவுளது திருமுகம் நாடுவோர் இவர்களே".- திபா 23:6
------------------------------------------------------------------

**முதல் வாசகம்: 1பேதுரு 5:1 - 4**

கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், வெளிப்படவிருக்கும் மாட்சிமையில் பங்குக்குரியவனுமாகிய நான் உங்கள் மூப்பர்களுள் ஒருவன் என்ற முறையில் அவர்களுக்குக் கூறும் அறிவுரையாவது: மூப்பர்களே, உங்கள் பொறுப்பிலுள்ள கடவுளின் மந்தையை மேய்த்து வாருங்கள். கட்டாயத் தினாலன்று, மன உவப்புடன், கடவுளின் விருப்பத்திற்கேற்ப அதைக் கண்காணித்தல் வேண்டும். இழிவான ஊதியத்திற்காகச் செய்யாமல், உள்ளத்தார்வமுடன் பணி செய்யுங்கள். உங்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்களை அடக்கி ஆளாமல், மந்தைக்கு முன்மாதிரியாய் இருந்து, அதை மேய்ப்பீர்களாக. அப்போதுதான் தலைமை ஆயர் தோன்றும் நாளில், மகிமையின் வாடாத வெற்றிவாகை சூட்டப்பெறுவீர்கள்.

**பதில்பாடல்:** ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை

**நற்செய்தி: மத்தேயு 16: 13 – 19**

அக்காலத்தில் இயேசு பிலிப்புச் செசரியா நகர்ப்புறம் வந்து தம் சீடரைப் பார்த்து, "மனுமகன் யார் என்று மக்கள் சொல்லுகிறார்கள்?" என்று கேட்டார்.அவர்களோ, "சிலர் ஸ்நாபக அருளப்பர் என்றும், சிலர் எலியாஸ் என்றும், சிலர் எரேமியாஸ் அல்லது இறைவாக்கினருள் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள்" என்றனர்."நீங்களோ நான் யார் என்று சொல்லுகிறீர்கள்?" என்று இயேசு அவர்களைக் கேட்டார். சீமோன் இராயப்பர் மறுமொழியாக, "நீர் மெசியா, உயிருள்ள கடவுளின் மகன்" என்றார். அதற்கு இயேசு, "யோனாவின் மகன் சீமோனே, நீ பேறுபெற்றவன். ஏனெனில், இதை உனக்கு வெளிப்படுத்தியது மனித வல்லமையன்று, வானகத்திலுள்ள என் தந்தையே.மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன். உன் பெயர் "பாறை." இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். நரகத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றிக்கொள்ளா. வானகத்தின் திறவுகோல்களை உனக்குக் கொடுப்பேன். எதெல்லாம் மண்ணகத்தில் நீ கட்டுவாயோ அதெல்லாம் விண்ணகத்திலும் கட்டப்பட்டதாகவே இருக்கும். எதெல்லாம் மண்ணகத்தில் நீ அவிழ்ப்பாயோ அதெல்லாம் விண்ணகத்திலும் அவிழ்க்கப் பட்டதாகவே இருக்கும்" என்றார்.

**தியானம்:** தள்ளாடும் பாறையான பேதுரு தலைமைச் சீடர் என்ற உன்னத நிலைக்கு உயர்த்தப்பட்டதனை நினைவுகூருகின்றோம். படிப்பறிவற்ற மீன்பிடித் தொழிலாளி புனித பேதுரு ஆண்டவர் இயேசுவை மறுதலித்ததாக நற்செய்தி தெரிவித்தாலும், ஆண்டவர் இயேசுவால் தொடப்பட்டு, மனிதர்களைப் பிடிப்பவராக மாற்றப்பட்டு தமது கடின உழைப்பால் ஆரம்பத் திருச்சபையைக் கட்டியெழுப்பி திருச்சபையின் தலைமைக்கல்லாக உயர்த்தப்பட்டார். புனித பேதுரு "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்" (மத்தேயு16:16) என அறிக்கை செய்தாலும், தனது மனித சுபாவத்தின் காரணமாக ஆண்டவர் இயேசுவின் பாடுகளின் போது "அவரை நானறியேன்" எனத் தள்ளாடும் பாறையானார். எனினும், பெந்தகோஸ்தே நாளில் தூய ஆவியால் நிரப்பப்பட்டு "மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதைவிட கடவுளுக்குக் கீழ்ப்படிவது மேல்" (திருத்தூதர் பணி 5:29) எனத் துணிவோடு பகிரங்கமாகப் போதித்தார். இறுதியில் கிறிஸ்துவுக்காகத் தலைகீழாக அறையப்பட்டு மரித்துப் புனிதராக உயர்த்தப்பட்டார். தலைமைப்பாறை பேதுரு குறித்து நான்கு நற்செய்தியிலும் திருத்தூதர்கள் பணியிலும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றைய நற்செய்தியில் புனித பேதுருவின் குழந்தைத் தனமான பேச்சின் வெளிப்பாட்டையும், இறைமகன் இயேவில் அவருக்கிருந்த பற்றும் பாசமும், அன்பும், அக்கறையும் இறைமகன் எவ்வித துன்பமும் அடையக்கூடாது என வருந்து வதனையும் நாம் கண்டுணரத் தவறக்கூடாது. எனவே, ஆண்டவர் இயேசுவை மெசியா என அறிவிக்கும் இறையாட்சிப் பணியில் நாம் எப்படிப்பட்ட நிலையில் இருக்கின்றோம்? எமது குடும்பங்களில், வேலைத்தளத்தில், சமூகத்தில் எமது ஒவ்வொரு சிறிய செயல்களாலும் ஆண்டவர் இயேசுவை அடுத்தவர்களுக்கு அறிவிக்கலாம். அந்த உன்னதமான பணிக்கென எம்மைத் தயார் செய்வோம். இன்றைய புனிதர் பேதுரு தமது பணிவாழ்வின் ஆரம்பத்தில் வாழும் மெசியாவான ஆண்டவர் இயேசுவின் மட்டில் இடறல்பட்டாலும், இறுதியில் ஆண்டவர் இயேசுவுக்காகத் தமது உயிரையே கொடுத்தவர். ஆயினும் நாம் எம்மாத்திரம்? நீரே மெசியா வாழும் கடவுளின் மகன் என எப்போது அறிக்கை செய்யப்போகின்றோம்?